[2008 மே 5

200—

கட்டடம்

***41605—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கூத்தாடிபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், கூத்தாடிபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை ஏதுமில்லாததால், அரசினால் கட்டடம் கட்டுவதற்குத் தற்போது வாய்ப்பு ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எஸ்.எம்.டி. 363, கூத்தாடிபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், 24–8–1988 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது. இதில் தற்போது 722 உறுப்பினர்கள் உள்ளனர். இந்தச் சங்கத்தில் கூத்தாடிபாளையம், வெள்ளயம்பாளையம், புதுக்குடியானூர், மாங்குட்டப்பட்டி, குறவன்காட்டானூர் ஆகிய பகுதிகளைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்தச் சங்கம் 2001 முதல் 2005 ஆம் ஆண்டுவரை நல்ல இலாபத்தில் இயங்கி வந்தது. 2005–2006 ஆம் ஆண்டு மட்டும் சிறிது நஷ்டத்தில் இயங்கியது. தற்போது கடந்த ஏப்ரல் மாதம் மட்டும், ஏறத்தாழ 43,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்தச் சங்கம் இலாபத்தில் இயங்கி வருகின்றது. எனவே, கூத்தாடிபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, துறை சார்பாக மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க முன்வருவாரா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2008 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு தினந்தோறும் 1,400 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. 170 உறுப்பினர்கள் நிரந்தரமாக பால் ஊற்றி வருகிறார்கள். தற்போது, சென்ற காலங்களைவிட 10 ஆயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அடிமனை வாங்குவதற்காக ரூபாய் 77 ஆயிரம் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்த இடத்தில் ஒரு சென்ட் நிலம் 10 ஆயிரம் ரூபாய்க்குமேல் போவதாக அறிகிறோம். ஆக, 1½ இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. வருகிற ஓரிரண்டு மாதங்களில் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து அடிமனை வாங்கப்படும் என்பதையும், அடிமனை வாங்கியபிறகு — சட்டப்பேரவை உறுப்பினர்கள், நம்முடைய ராசிபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி மற்றும் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி போன்றவர்களும் தங்களுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கட்டடங்களைக் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். — நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்களும் நிதி ஒதுக்கீடு செய்வார்களேயானால் அவர் குறிப்பிடுகிற இடத்தில் அந்தச் சங்கத்திற்கான கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தப் பகுதியில் குடிநீர், சாலை வசதி போன்றவற்றிற்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி வருகின்றேன். அமைச்சர் அவர்கள், அந்த அடிநிலம் வாங்குவதற்காக துறையின்வாயிலாக நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படும் என்று கூறியிருக்கின்றார். அந்த அடிநிலத்தை பொதுமக்களின் சார்பாக சட்டமன்ற உறுப்பினராக நானே முன் நின்று, நான் இலவசமாக வாங்கி துறைக்கு ஒப்படைக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,

TRUTH ALONE TRIUMPHS

துறையின்மூலமாக கூத்தாடிபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், இதுபோல் தமிழகத்தில் இலாபத்தில் இயங்கி வருகின்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் கண்டறிந்து ஒரு தொகுதிக்கு இரண்டு கட்டடங்களை அமைச்சர் அவர்கள் துறையின்வாயிலாக கட்டிக்கொடுத்தால் பால் வளத் துறைக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் பால் உற்பத்தியாளர்கள் மத்தியிலே நல்ல பெயர் ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அப்படி அமைச்சர் அவர்கள் கட்டிக்கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமாக இலாபம் வரக்கூடிய சங்கங்களுக்கு, சங்கத்தின்மூலமாக கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும். அப்படி இல்லாதபட்சத்தில் அடிமனைகள் இருக்குமேயானால்—நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் நிறையபேர் அதுபோல கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி, நம்முடைய குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் எல்லாம் நிதி ஒதுக்கீடு செய்து கட்டடம் கட்டுவதற்காக ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆக, அதிக வருமானம் உள்ள இடங்களில் சங்கமே கட்டடம் கட்டிக்கொள்ளும். வருமானம் குறைவாக உள்ள இடங்களில் மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வார்களேயானால் நிச்சயமாக கட்டடம் கட்டிக்கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]